TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)
(பா.சு.பா.ச பிரிவு 173 இன் கீழ்)

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109787

1. District மாவட்டம் : Virudhunagar | PS காவல்நிலையம் : Vigilance and Anti Corruption | Year ஆண்டு : 2025 | FIR No. முதஅ எண் : 03/2025 | Date நாள் : 24.04.2025

2. (i) Act சட்டம் : PC Act 1988 as Amended in 2018 | Sections பிரிவுகள் : u/s 7
(ii) Act சட்டம் : | Sections பிரிவுகள் :
(iii) Act சட்டம் : | Sections பிரிவுகள் :
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 16.04.2025 at | Date to : நாள் வரை 15.00 hrs
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் 24.04.2025 at | Time to : நேரம் வரை 14.00 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.04.2025 | Time : நேரம் 16.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24.04.2025 | Time : நேரம் 16.00 hrs

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — About 20 Kms / East

Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — திரு.சூரியக்குமார்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — திரு.அமல்ராஜ்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — 03.06.2000
(d) Nationality : நாட்டினம் — Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் — பாதிரியார் படிப்பு
(g) Address : முகவரி — க.எண்.3/44-B, சூரம்பட்டி, சர்ச் தெரு, மல்லாங்கிணர், காரியாபட்டி தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு.கரைமேலு, கிராம நிர்வாக அலுவலர், மல்லாங்கிணர் கிராம நிர்வாக அலுவலகம், காரியாபட்டி தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- தாமதம் இல்லை -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: Not arise
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : Not arise
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**பணிந்து அனுப்பப்படுகிறது.**

நான் இன்று 24.04.2025 மாலை 16.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி தாலுகா, மல்லாங்கிணர், சூரம்பட்டி, சர்ச் தெரு, கதவு எண்.3/44-B-இல் வசிக்கும் திரு.அமல்ராஜ் என்பவரின் மகன் திரு.சூரியக்குமார் என்பவர் என் முன்பாக ஆஜராகி விபரம் சொல்லி கொடுத்த புகார் மனுவை பெற்று அதை படித்துப்பார்த்து, மேலும் அவரிடம் விபரம் கேட்டு தெரிந்து கொண்டேன். உடன் அந்த புகார் தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில், எதிரி மீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வாதி மீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 24.04.2025 இரவு 19.00 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரி மீது விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.03/2025 சட்டப் பிரிவு 7 of the

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

24/04/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in charge Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

25.04.25 at 11.15 hrs.

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. Boominathan.
Rank: நிலை Insp of Police

**விருதுநகர் மாவட்ட ஊ.த.க. பிரிவு குற்ற எண்.03/2025 பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி**

Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன்படி வழக்குப்பதிவு செய்தேன். வாதி திரு.சூரியக்குமார் அவர்களது புகார் மனு விபரம் பின்வருமாறு:- அனுப்புநர்:- அ.சூரியக்குமார், வயது 25/2025, த/பெ.அமல்ராஜ், கதவு எண்.3/44-B, சூரம்பட்டி, சர்ச் தெரு, மல்லாங்கிணர், விருதுநகர் மாவட்டம். பெறுநர் உயர்திரு.காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, விருதுநகர். அய்யா, நான் விருதுநகர் மாவட்டம், மல்லாங்கிணர், சூரம்பட்டி சர்ச் தெருவில் எனது தாய் தந்தையருடன் குடியிருந்து, பாதிரியாராவதற்கு படித்து கொண்டிருக்கிறேன். எனது அப்பா திரு.அமல்ராஜ் மற்றும் பெரியப்பா திரு.ஜெயசந்திரன் ஆகியோர்களுக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் பாத்தியப்பட்ட விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி தாலுகா, மல்லாங்கிணர் உள்கடை சூராம்பட்டி கிராம சர்வே எண்.311/7B மற்றும் 311/8G-இல் உள்ள 1962 சதுரடி காலிமனையிடத்தை, எனது பெரியப்பா திரு.ஜெயசந்திரன் அவர்கள், கடந்த 09.04.2025ஆம் தேதி எனது அப்பா திரு.அமல்ராஜ் பெயரில் காரியாபட்டி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.1312/2025-ன் பிரகாரம் பாக விடுதலை ஆவணம் மூலம் எழுதி கொடுத்துள்ளார். இந்த காலிமனையிடத்திற்கு என்னுடைய அப்பாவின் அறிவுறுத்தலின்பேரில் அவரது பெயரில் சப்டிவிசன் பட்டா பெறுவதற்கு, சம்மந்தப்பட்ட ஆவணங்களுடன் கடந்த 16.04.2025ஆம் தேதி மதியம் சுமார் 03.00 மணியளவில் மல்லாங்கிணர் வி.ஏ.ஓ அலுவலகத்திற்கு சென்று, அங்கிருந்த வி.ஏ.ஓ திரு.கரைமேலு அவர்களை சந்தித்து, மேற்படி ஆவணங்களை காண்பித்து எனது அப்பா பெயரில் சப்டிவிசன் பட்டா பெறுவது சம்மந்தமாக கேட்டேன். அப்போது அவர் என்னிடமிருந்த ஆவணங்களை வாங்கி பார்த்துவிட்டு, நான் நினைச்சாத்தான் உங்க அப்பா பெயரில் சப்டிவிசன் பட்டா ஆகுமென்றும், நான்தான் உங்க அப்பா பெயரில் சப்டிவிசன் பட்டா கிடைக்க ஏற்பாடு செய்யணும் என்றும், அதனால ரூ.6,000/- பணத்தை ரெடி பண்ணிக்கொண்டுவந்து என்னிடம் கொடுத்தால் உங்க அப்பா பெயரில் விரைவில் சப்டிவிசன் பட்டா பெறுவதற்கு ஏற்பாடு செய்து தருவேன் என்று கூறி அனுப்பிவைத்தார். பின்னர், மீண்டும் இன்று (24.04.2025) மதியம் சுமார் 02.00 மணியளவில் எனது அப்பா பெயரில் சப்டிவிசன் பட்டா பெறுவது தொடர்புடைய ஆவணங்களுடன் மல்லாங்கிணர் வி.ஏ.ஒ அலுவலகத்திற்கு சென்று, வி.ஏ.ஓ திரு.கரைமேலு அவர்களை சந்தித்து, எனது அப்பா பெயரில் சப்டிவிசன் பட்டா பெறுவது சம்மந்தமாக கேட்டேன். அப்போது அவர், நான் கேட்ட ரூ.6,000/- பணம் கொண்டுவந்திருக்கீங்களா என்று கேட்டார். அதற்கு நான், நாங்க ரொம்ப கஷ்டப்படுறவங்க சார், அவ்வளவு பணம் எங்களால ரெடி பண்ண முடியாது சார், பாக விடுதலை பத்திரம்தானே சார், நீங்க பார்த்து செஞ்சு கொடுங்க சார் என்று சொன்னேன். அதற்கு அவர், எந்த பத்திரமா இருந்தாலும் சப்டிவிசன் பட்டா பெற ஏற்பாடு செய்வதற்கு,

சும்மால்லாம் செய்து தர முடியாது என்றும், நீங்க வேணா ரூ.2,500/-ஐ குறைச்சுகிட்டு ரூ.3,500/- பணத்தை ரெடி பண்ணி கொண்டுவந்து கொடுங்க என்றும், இந்த ரூ.3,500/- பணத்தை ரெடி பண்ணி கொண்டுவந்து கொடுத்தால்தான், உங்க அப்பா பெயரில் விரைவில் சப்டிவிசன் பட்டா கிடைக்க ஏற்பாடு செய்து தருவேன் என்றும், இல்லையென்றால் ஒரு வேலையும் நடக்காது என்றும் கூறி, நான் கொண்டு சென்று ஆவணங்களின் நகல்களை மட்டும் பெற்றுக்கொண்டு, மீண்டும் வரும்போது கண்டிப்பாக நான் கேட்ட ரூ.3,500/- பணத்துடன் வரவேண்டும் என்று கராறாக சொல்லி அனுப்பி வைத்தார். இந்த விவரங்களை வீட்டிற்கு வந்தவுடன் எனது அப்பாவிடம் சொன்னபோது, நியாயமாக செய்ய வேண்டிய அரசு வேலைக்கு நாம ஏன் லஞ்சப்பணம் கொடுக்கணும், நீ போய் விருதுநகர் லஞ்ச ஒழிப்பு துறையில புகார் பண்ணு என்று சொன்னார். எனக்கும் வி.ஏ.ஓ-வுக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. எனவே என்னிடம் எனது அப்பா பெயரில் சப்டிவிசன் பட்டா கிடைக்க ஏற்பாடு செய்வதற்கு ரூ.3,500/- லஞ்சப்பணம் கேட்ட மல்லாங்கிணர் வி.ஏ.ஓ திரு.கரைமேலு என்பவர்மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (sd) Tr.A.Suriyakumar (24.04.2025) Sir, Received the complaint on 24.04.2025 at 16.00 hrs. The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Viruthunagar V&AC Cr.No.03/2025 u/s 7 of PC Act 1988 as amended in 2018 on 24.04.2025 at 19.00 hrs and took up for investigation. (Sd) (R.Boominathan) 24/4/25 Insp of Police, V&AC, VNR.

The original FIR along with original complaint is submitted to the court of the CJM cum Special Judge for P.C. Act cases, Srivilliputhur and copies submitted to the concerned officers.

Insp of Police, V&AC, VNR.